# Presenting the Heroine among The Female Characters in Sangam Literature

**OPEN ACCESS**

Manuscript ID: TAM-070320236090

Volume: 7

Issue: 3

Month: January

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.10.2022

Accepted: 20.11.2022

Published: 01.01.2023

Citation:
Sadasivam, R. "Sanga Ilakiya Pen Manthargalil Thalaviyai Munvaithu." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 3, 2023, pp. 60–66.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i3.6090

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

**R. Sadasivam**
*Associate Professor, Department of Tamil*
*Annamalai University, Annamalai Nagar, Tamil Nadu, India*

**Abstract**
In Sangam literature, the most important of the women is 'Thalaivi'. She is known to be a co-worker with the 'Thalaivan' in a life of love and a person who excels in the life of chastity. The 'Sevilithai' and the 'Natrai' are overjoyed to know that her daughter is excelling in the family life. She is the one who stands and guides the leader in 'kalavu' and chastity as her best friend. The Sangam literature speaks a lot about this.

**Key Words:** Sangam Literature, Chastity, Kalavu, Sevilithai, Morality, Thalaivi, Thalaivan

**References**

1. Puliyur Kesikan. 2008. *Tholkappiyam*. Chennai, Aruna Publications.
2. Balasubramaniyam, K.V. *Natrinai Moolamum Uraiyum*, Chennai, New Century Book House.
3. Balasubramaniyam, K.V. *Akananooru Moolamum Uraiyum*, Chennai, The New Century Book House.
4. Balasubramaniyam, K.V., *Kurunthogai Moolamum Uraiyum*, Chennai, New Century Book House.
5. Navirkarasar, *Agaporum Vilakam*.
6. Irayanar, *Agaporul*.
7. Narkaviraasanambi, *Agaporul Vilakkam*.
8. Valan Arasu. 2010. *Thirukkural*, Chennai, Surya Publications.

# சங்க இலக்கிய பெண் மாந்தர்களில் தலைவியை முன்வைத்து

***இரா. சதாசிவம்***
இணைப்பேராசிரியர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

***ஆய்வுச்சுருக்கம்***

*சங்க இலக்கியத்தில் பெண்மாந்தர்களில் முக்கியத்துவம் வாய்ந்தவள் தலைவி ஆவாள். இவள் களவு வாழ்க்கையில் தலைவன் உடன் உடன்போக்கு செல்பவளாகவும் கற்பு வாழ்வில் சிறந்து விளங்குபவளாகவும் அறியப்படுகிறாள். செவிலித்தாய் தன் மகள் குடும்ப வாழ்க்கையில் சிறந்து விளங்குகின்றான் என்பதை அறிந்த செவிலியும், நற்றாயும் மனமகிழ்ச்சியில் திளைக்கின்றார்கள். களவிலும் கற்பிலும் தலைவிக்கு உற்ற தோழியாய் துணைநின்று வழிநடத்துபவள் ஆவாள். இதை சங்க இலக்கியம் அதிகம் பேசுகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், கற்பு வாழ்வு, களவுநெறி, செவிலித்தாய், நன்னெறி*

**முன்னுரை**

பெண்மாந்தர் என்ற முக்கோணத்தின் மேல்முனையாக விளங்குபவர் தலைவியாவாள். பிற அகமாந்தர்கள் தலைவி வழிபட்டவர்கள் ஆவார். தலைவியின் பண்புகளுள் முதலாவது கற்புடைத் திண்மையே ஆகும். பிற பண்புகள் கற்பினைச் சார்ந்து பொலிவு பெறும். அப்பொலிவிற்கு தலைவியின் கூற்று நிகழ்வனவாகும். களவுநெறி கற்பாக முடியும் போது அது நன்னெறி என்று பெயர் பெறும். மறை ஒழுக்கம் செய்யும் காதலர்கள் ஊரில் இருப்பினும் உடன்போக்கு முறையில் அகன்று போயினும் வரைவு என்ற அமைப்பிற்குள் உட்பட்டு கணவன். மனைவியாக வாழ்தல் வேண்டும். இதைத்தான் பெற்றோரும் சமுதாயத்தினரும் வரவேற்பர். களவின் முடிவு கற்பு என்பது அகத்திணை வலியுறுத்தும் தலையாய அறமாகும். இவ்வாறாக சங்க இலக்கியம் தலைவியின் போக்கினை கூறுகிறது.

**தலைவியின் இலக்கணம்**

**‘அச்சமும் நானும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப[1]’**

அச்சம், நாணம், பேதைமை என்று மடம் ஆகிய இம்மூன்று பண்புகளும் எக்காலத்தும் முதன்மை பெற்று இருத்தல் பெண்டிர்க்கு உரியவை என்று தொல்காப்பியர் தலைவியின் இலக்கணத்தை மிகச்சிறப்பாக எடுத்து இயம்புகிறார்.

**தலைவியின் வளர்ப்பு**

தலைவி சிறுமியாக இருந்த பொழுது மிக செல்லமாக வளர்க்கப்பெற்றவள்.

**‘பிரசம் கலந்த வென்சுவைத் தீம்பால்**
**விரிகதிர்ப் பொற்கலத்து ஒருவகை ஏந்திப்**
**புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்**
**உன் என்று ஒக்குபு பிழைப்புத் தெண்நீர்[2]’**

என்ற பாடலில் தேன் கலந்து நல்ல சுவையுடைய இனிய பெண்ணிறப் பால் கலந்த உணவைப் பொற்கலத்தில் இட்டு அதனைக் கையில் ஏந்தி மெல்லிய சிறுகோலால் ஓங்கிப் பயமுறுத்தியே உண்ண வைக்க வேண்டும். அதனையும் உண்ண மறுப்பாள் தலைவி இப்படிச் செல்வ செழிப்போடு வளர்கிறாள். மேலும்,

**'செல்லத் தந்தை இடனுடை உரைப்பின்**
**ஆடுபந்து உருட்நள் போல ஓடி**
**அம்சில் ஓதி இவள் உறும்**
**பஞ்சிமெல் அடி நடைபயிற் றும்மே[3]'**

என்ற பாடலில் பஞ்சு போன்ற மெல்லடியினை உடையவள் தலைவி என்பதை அறியமுடிகிறது. இவ்வாறாக தலைவி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மிக அழகிய பெண்ணாக வளர்கிறாள், என்பதை

**'தம் நயத்து உறைவோர்த் தாங்கி தாம் நயத்து**
**இனஅமர் கேளிரொடு எமுறக் கெழீஇ**
**நகுதல் ஆற்றார் நல்கூர்ந் தோர் என**
**மிகுபொருள் நினையும் நெஞ்சமொடு**
**அருள்பிறிது**

**..............................................................**

**பணிஓர்த் தன்ன தென்குரல்**
**கணிவாய் பல்லிய காடுஇறந் தோரே[4]'**

என்று அகநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

### தலைவியின் குணநலம்

சங்க கால மக்களுள் இல்லாளே இல்லறத்தில் பெரிதும் பொறுப்புகளையும், கடமைகளையும், வாய்ந்தவைகளாக வாழ்ந்து இருக்கின்றாள். இருப்பினும் சங்ககாலம் தொட்டு இக்காலம் வரை தனித்தனியாக குடும்ப அமைப்புகள் சாந்த நிகழ்வுகள் பெண்களை மையப்படுத்தியே செயல்படுகின்றன. குடும்பத்தின் தலைமைப் பொறுப்பு வகிப்பவள் தலைவியாகவே சித்தரிக்கப்படுகிறாள். அத்தகையச் சிறப்பினை வாய்ந்த தலைவியின் குணநலன்களைத் தொல்காப்பியர்.

**"கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லதின்**
**விருந்துபுறத் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்**
**மறவு மன்ன கிழவோள் மாண்புகள்[5]"**

என்ற நூற்பாவின் வழி தெளிவாக எடுத்துரைக்கிறார். எனவே சங்கப் பாடல்களில் வரும் தலைவி நற்குணம் வாய்ந்தவளாகவும், தியாகத்தன்மை நிறைந்தவளாகவும் காணப்படுகிறாள். காதலை மையப்படுத்தி தலைவியின் வாழ்வு கட்டமைக்கப்படினும் குடும்பம், சமூகம் என்ற இரு அமைப்புகளிலும் அக்கறை உடையவளாக விளங்குகின்றாள் தலைவி. இவளின் குணநலன்களைக் கூறும் தொல்காப்பியம் கற்பு, காமம், ஒழுக்கம், பொறுமை, பெருமை, விருந்தோம்பல், சுற்றும், ஓம்பல் போன்ற பிறவும் தலைவிக்குரிய குணநலமாகும் என்கிறார் தொல்காப்பியர்.

### சங்ககால களவுக் காலம்

சங்க காலம் இயற்கையைத் தழுவி வந்த காதற் காலம் ஆகும். அந்நாளில் களவு நெறி சமுதாயமெங்கும் பரவிக்கிடந்த ஒரு நெறியாக இருந்தது. ஏறுதழுவுதல், புனலாடல் முதலான விழாக்கள் எல்லாம், பருவம் வாய்ந்த இரு பாலர்கள் சந்திப்பதற்கும், பழகுவதற்கும் வாய்ப்பாக அமைந்தனவாகும். அதில் காதலர்களானோர் ஏராளமானவர் ஆவர் ஆதலின் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு முதலான களவு நெறிகள் மிகுதியாக திகழ்ந்தன. தேரேறி வந்து களவு நடத்தும் செயல்களும் மிகுதி இதனை,

**"பனிக்கழி துழவும் பானாள் தனித்து ஓர்**
**தேர்வந்து பெயர்ந்தது என்ப. அதற்கொண்டு**
**ஓரும் அலைக்கும் அன்னை[6]"**

என்ற பாடலில் இவ்வூரில் நள்ளிரவில் எத்தனையோ நேர்வுகள் வந்து செல்கின்றன. என்னைப் போன்ற இளமகளிர் பலர் இவ்வூரில் வாழ்கின்றார்கள். ஒரு தேர் வந்து போயிற்று என்ற செய்தியைக் கேட்டால் என் அன்னை ஐயப்படுவாள் என்ற செய்தித் தலைவிக் கூற்றின் வழி சங்க காலத்தில் களவின் மிகுதியை நம்மால் அறிய முடிகிறது.

### இயற்கைப் புணர்ச்சி

இயற்கைப் புணர்ச்சி என்பது தலைவனும், தலைவியும், வேறு எவருடைய துணையுமின்றி ஓர் இடத்தில் சந்திப்பதாகும். காந்தருவம் என்பது இயற்கைப் புணர்ச்சியொடு ஒக்கும் என்பதை,

**"தெய்வம் தன்னில் எய்தவும் கிழத்தியின்
எய்தவும் படுஉம் இயற்கைப் புணர்ச்சி"[7]**

கொடுப்போரும் கொள்வோரும் இன்றித் தலைவனும் தலைவியும் நல்வினையால் தாமே கூடுவதாகும். முதலாவதாகிய களவுப் புணர்ச்சி தெய்வத்தால் எய்துவது. தலைவியால் எய்துவது என இருவகைப்படும். எனவே இப்புணர்ச்சி தெய்வம் கூட்டக் கூடுதலான தெய்வப் புணர்ச்சியும் எனவும் மற்றும் விதி கூட்டக் கூடுதலாக அப்பெயர் பெற்றது. இதன் முதலாகக் கூடப் பெறுதலால், முன்னுறு புணர்ச்சி என்றும் மனக்குறிப்பின்றி எதிர்பாராத நிலையில் இயல்பாக நிகழ்ந்ததால் இயற்கைப் புணர்ச்சி என்றும் பெயர் பெற்றது. அன்பினால் கூடும் கூட்டம் ஆதலால் காமப்புணர்ச்சி என்றும் குறிப்பிடுவர்.

**"அதுவே தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்"[8]**

தலைவன் தலைவி இருவரும் அன்பினாலும், குணத்தினாலும், கல்வியாலும், உருவினாலும், திருவினாலும் ஒத்து இருப்பினும் தலைவன் உயர்த்து இருப்பினும் ஓரிடத்தில் புணர்வது இயற்கைப் புணர்ச்சி என்கிறார் இறையனார்.

அன்பின் ஐந்திணைக்குரிய காதல் உணர்ச்சிதான் இன்பத்திற்கு அடிப்படையாக இருப்பது இத்தகைய உணர்ச்சியைச் சிறந்த முறையில் படைத்துக் காட்டும் இன்ப வாழ்வில் முதலாக நடைபெறுவது இயற்கை புணர்ச்சியாகும் இதனை.

**"மாசு அறக் கழீயை யானை போலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் தறுதல்
பைதல் ஒழுகலை சேக்கும் நாடன்
நோய்தந் தனனே தோழி!
பசலை ஆர்ந்த நம் வேளையும் கண்ணே"[9]**

என்ற பாடலில் தூசிபடிந்த அழுக்கு முற்றிலும் நீங்க பெற்ற யானையை போலத் காரிய சுரசுரப்பையும் பசுமை தவழும் காட்டில் ஓரிடத்தில் தங்கும் தலைவன் எனக்கு பிரிவால் பசலை நோய் தந்தன் என தன்னோடு கூடி மகிழ்ந்தத் தலைவனை எண்ணி வருந்துகிறாள் தலைவி.

### இயற்கைப் புணர்ச்சிக்கான அடிப்படை

இயற்கைபுணர்ச்சிக்கானஅடிப்படையாவன.

1. காட்சி
2. ஐயம்
3. தெளிவு
4. குறிப்பறிதல்

என்ற நான்காகும் தலைவியின் சந்திப்பில் இந்நான்கும் அடங்கும்.

### அ) காட்சியின் இலக்கணம்

இயற்கை புணர்ச்சி என்பதில் முதன் முதலில் தோன்றுவது காட்சி ஆகும். தலைவன் தலைவி இருவரும் முற்பிறவியில் கொண்டத் தூய்மையான அன்பினால் இப்பிறவியில் ஒருவரை ஒருவர் காண்பது காட்சி ஆகும்.

ஒருவரையொருவர் எதிர்ப்படும் தலைவன், தலைவிக்கு இருக்க வேண்டிய பத்து வகைப் பொருத்தங்களைக் குறிப்பிடும் தொல்காப்பியர்,

**"பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"[10]**

என்ற நூற்பாவின் வழி அறியலாம். பிறப்பு என்பது,

1. அரசர்
2. அந்தணர்
3. வணிகர்
4. வேளாளர்
5. ஆயர்
6. வேட்டுவர்
7. குறவர்
8. நுளையர்

என்னும் குலப்பிறப்பைக் குறிக்கும். குடிமை என்பது ஒழுக்கம் ஆகும். ஆண்டு என்பது அகவையைக் குறிக்கும் அருள் என்பது கருணை என்ற புறப்பொருளையும்

தரும். இக்குணங்களுள் பெரும்பான்மை ஒத்தத் தலைவன், தலைவி இருவரும் முறையாக ஓரிடத்தில் சேர்வதாகும். இதனைத் தொல்காப்பியர்.

**“ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பல தாணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே”[11]**

என்ற நூற்பாவின் வழி அறியலாம். மேலும் காட்சியின் இலக்கணம் குறித்துக் கூறும் நாற்கவிராசநம்பி, முற்பிறவியில் தலைவன், தலைவியிடம் கொண்டிருந்தத் தூய்மையான அன்பானது மறுபிறவியிலும் தொடர்கின்றது என்கிறார். ஊழின் பொருட்டுத் தலைவனும், தலைவியும் ஓரிடத்தில் தனியாகக் காண்பர். இது காட்சி ஆகும். தலைவனும் தலைவியும் குலம், செல்வம், அறிவு போன்றவற்றில் ஒப்பாக இருப்பர் இதனை,

**“புணர்ப்பதும் பிரிப்பதும் ஆகிய பால்களும்**
**புணர்க்கும் பாலில் பொருவு இறந்து ஒத்த**
**கறைவேற் காளையும் கன்னியும் காண்ப**
**இறையோன் உயிரினும் குறைவின்று என்மனார்”[12]**

என்ற நூற்பாவின் நாற்கவிராச நம்பி விளக்கியுள்ளார்.

## இடந்தலைப்பாடு

இயற்கைப் புணர்ச்சியில் தற்செயலாகச் சந்தித்தத் தலைவன் தலைவியர் அடுத்தடுத்துச் சந்திக்க விரும்புகின்றனர். முதல்நாள் சந்தித்த அதே இடத்தில் மறுநாளும் இருவரும் எதிர்படுதலையே இடந்தலைப்பாடு என்பர். இந்த இடந்தலைப்பாடு என்பதனை இறையனார் தலைப்பெயல் மரபு எனக் குறிப்பிட்டுள்ளார். இதனை,

**“பாங்கியின் தமியோன் இடந்தலைப் படராமென்று**
**ஆங்க இரண்டே தலைப்பெயல் மரபே”[13]**

முதல் நாளில் தலைவியோடு கூடிப் பிரிந்தத் தலைவன் மறுநாள் தானாகப் பாங்கன் இருக்கும் இடத்திற்குச் சென்று அவன் உதவியை நாடித் தலைவியைச் சந்தித்தலும், பாங்கன் அல்லது தானே, தனியாகச் சென்று தலைவியைச் சந்தித்தலும் ஆகிய இருநிலையில் இடந்தலைப்பாடு நிகழ்வனவாகும்.

**“பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன்நோய்க்குத் தானே மருந்து”[14]**

வாதம், பித்தம், சிலேட்டுமம் (சளி) முதலியவற்றால் தோன்றும் நோய்களுக்கு வேறுவேறு மருந்துகள் உள்ளன. அணிகலன்களை அணிந்து தலைவியால் நேர்ந்த நோய்க்கு மருந்து எதுவும் இல்லை. அது பிறரிடமிருந்து கிடைப்பதும் இல்லை. அந்நோய்க்கு தலைவி ஒருத்தியே மருந்து ஆவாள்.

எனவே தன் நோய்க்கு தானே மருந்தாவாள் என்பதை இக்குறட்பாவின் வழியாக வலியுறுத்துகிறது.

## பாங்கி மதி உடன்பாடு

தலைவனும், தலைவியும் கூடி மகிழ்ந்ததைத் தோழி தன்னுடைய அறிவால் அறிந்து கொள்வதே பாங்கிமதி உடன்பாடு ஆகும். தலைவியிடம் வேறுபாடு கண்ட தோழி அவளுடைய சொல் செயல்களை ஆராய்ந்து உண்மை தெளிவாள் பின்பு தலைவன், தலைவியரின் களவிற்குப் பாங்கி என்ற தோழியும் உடன்படுவாள். இதனை தொல்காப்பியர்,

**குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்[15]**

என்ற நூற்பாவின் வழி முன்னுற உணர்தல், குறையுற உணர்தல், இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என்ற மூன்று வகைகளில் நிகழ்வதாகும்.

## நெஞ்சொடு கிளத்தல்

தலைவன், தன் நெஞ்சை முன்னிலை ஆக்கித் தனக்குத்தானே சொல்லிக்கொள்ளுதல், தலைவன் மீது கொண்ட அன்பை மற்றவரிடம் சொல்ல வெட்கப்பட்டுத் தமக்குத்தாமே சொல்லி ஆற்றிக்கொள்ளுதல் நெஞ்சொடு கிளத்தல் ஆகும்.

**"கோடுஈர் இலங்குவளை நெகிழ நாளும்**
**பாடுஇல கலிழும் கண்ணொடு புலம்பி**
**ஈங்கு இவன் உறைதலும் உய்குவம் ஆங்கே**
**எழு இனிவாழி என் நெஞ்சே! முனாது**
**.....................................................**
**வழிபடல் கூழ்ந்திசின் அவருடை நாட்டே"[16]**

நெஞ்சமே! சங்கை அறுத்துச் செய்த ஒளிபொருந்திய வளையல்கள் கழன்றுவிழ, நாள்தோறும் கண் இமை பொருந்தாமல் உறக்கமின்றி அழும் கண்ணுடன் வருந்தித் தனித்து இருப்பதைத் தவிர்த்து தொலைவில் உள்ள, கஞ்சங் குல்லைக் கண்ணி கூடிய வடு கரது எல்லையில் உள்ள பல வேற்படையை உடைய கட்டி என்பவனது நல்ல நாட்டிற்கு அப்பால் உள்ளதும், வேற்றுமொழி பேசும் நாடு ஆகிய இடத்தில் உள்ளார். ஆயினும் அவர் இருக்கும் நாட்டிற்கு வழி தேடிச் செல்லுதலை முடிவு செய்து விட்டேன். அதனால் நெஞ்சே விரைந்து புறப்படுவாயாக என தன் நெஞ்சிற்கு சொல்கிறாள் தலைவி.

**"கலந்து உணர்த்தும் காதலர்க் கண்டால்**
**புலந்து உணராய்**
**பொய்க்காய்வு காய்திஎன நெஞ்சு"[17]**

பிரிந்து சென்ற தலைவன் என்னை வாட்டுவதை நன்கு நீ நேரில் பார்த்து தெரிந்து வைத்தும், பிரிந்தவர் வந்த பின் அவர்மேல் சற்றும் கோபம் கொள்ளாமல், அவளுடன் ஐக்கியம் ஆகிவிடுவாய். இப்பொழுது பொய்யாகப் பொய்க்காய்ச்சல் காய்கின்றாய் என தலைவி தன் நெஞ்சிற்கு சொல்லியதாகும்.

எனவே பொய்க்காய்வு என்பது நிலையில் வெறுப்பும் என்பர் பரிமேலழகர். இதனைவிட்டுத் தலைவரைத் தேடி அவரிடம் செல்வோம் வா என்பது கருத்தாகும்.

## முடிவுரை

சங்க காலத்தில் பெண்கள் அவரவர் நிலைகளில் தனித்தனியாக சிறப்புகளைக் கொண்டிருந்தனர். பெண்களின் நிலைப்பாடுகள் களவு (காதல்) அடிப்படையிலும் கற்பு (குடும்பம்) அமைப்பு வழியே கட்டமைக்கப்படுகிறது. ஒவ்வொரு பாத்திரங்களின் தன்மைக்கு ஏற்ப தலைவிக் கூற்றுகள் அமைந்துள்ளன. இயற்கைப்புணர்ச்சி இடந்தலைப்பாடு, தோழி மதிவுடன்படுதல் உள்ளிட்ட இடங்கள் கூற்று நிகழும் நிலைக்களன்களாக உள்ளனவாகும். மேலும் மாந்தர்களின் அமைப்பிற்கேற்பச் சில நிலைக்களன்கள் கூடியும் குறைந்தும் அமைகின்றன. தோழியே இரவுகுறி, பகல்குறி என அனைத்து நிலையிலும் உற்ற துணையாக தலைவிக்குத் திகழ்கிறாள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

## சான்றெண் விளக்கம்

1. தொல்.பொருள்.களவு. நூ. 96.
2. நற்றிணை, பா. 110.
3. மேலது., பா. 324.
4. அகநானூறு, பா. 151.
5. தொல்.பொருள்.கற்பு. நூ. 4:150.
6. குறுந்தொகை, பா. 246.
7. அகப்பொருள் விளக்கம், நூ. 32.
8. இறையனார் அகப்பொருள். நூ. 2.
9. குறுந்தொகை, பா. 13.
10. தொல்.பொருள்.மெய். நூ. 269.
11. தொல்.பொருள்.களவு. நூ. 90.
12. அகப்பொருள் விளக்கம். நூ. 119.
13. இறையனார் அகப்பொருள். நூ. 3.
14. குறள். 1102.
15. தொல்.பொருள். களவு. நூ. 12.
16. குறுந்தொகை. நூ. 11.
17. வளன் அரசு. 1246.

## துணைநிற்கின்ற நூல்கள்


1. புலியூர்கேசிகன். 2008. *தொல்காப்பியம் தெளிவுரையும்*. சென்னை, அருணா பப்ளிகேஷன்ஸ்.
2. பாலசுப்பிரமணியம், கு.வெ. *நற்றிணை மூலமும் உறையும்*. சென்னை, நியூ சென்சுரி புக் ஹவுஸ்.

3. பாலசுப்பிரமணியம், கு.வெ. *அகநானூறு மூலமும் உறையும்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
4. பாலசுப்பிரமணியம், கு.வெ. *குறுந்தொகை மூலமும் உறையும்*. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
5. நாற்கவிராசர், அகப்பொருள் விளக்கம்.
6. இறையனார், அகப்பொருள்.
7. நாற்கவிராசநம்பி, அகப்பொருள் விளக்கம்.
8. வளன் அரசு, திருக்குறள் சூர்யா பதிப்பகம், சென்னை, 2010.